திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையிலிருக்கும் இந்த ஃபாரன்ஸிக் லாபரடரிக்குப் புதிதாக அதிகப் பணம் கொடுத்திருக்கிறீர்களே அதனுடைய செயலாற்றும் முறை எம்முறையில் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நன்முறையில் இருக்கிறது.

Posts of Deputy Inspector-General of Police

* 545 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of posts of Deputy Inspector-General of Police have been created in this State during 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உணவுப் பிரிவு-குற்றப் புலனாய்வுத் துறைக்கு காவல் துறை டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும், தமிழ்நாடு காவலர் ஆணைக்குழு (போலீஸ் கமிஷன்) உறுப்பினர்-செயலாளர் பதவிக்கு டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும் 1969-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன.

திரு. எ. சுவாமிதாஸ்: இந்த நியமனங்களுக்காக ஆண்டு தோறும் அரசாங்க நிதியிலிருந்து எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாதமொன்றுக்கு டி.ஐ.ஜி.-க்கு ரூ. 1,600 முதல் ரூ. 2,000 வரை சம்பளமாக செலவாகிறது.

காவல் துறை அலுவலர்கள் பயிற்சிக் கல்லூரி

* 546 வின—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை சென்னைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தற்போது அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்குப் பயிற்சிக்காகப் போகக் கூடியவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாத நிலை இருப்பதோடு, அவர்களுடைய உணவுக்குக் கூட கஷ்டமாக இருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அதற்கு அரசு என்ன பரிகாரம் காண முயற்சிக்கிறது?

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வேலூரில் நடைபெறும் போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்கு இன்னும் நவீன வசதிகள் வேண்டும் என்றும், இன்னும் கூடுதலான சுற்றுவளைவு (காம்பவுண்டு) வேண்டுமென்றும், விளையாட்டுத் திடலுக்குப் போதுமான காற்றோட்டமுள்ள வசதி வேண்டும் என்றும் போலீஸ் கமிஷன் தனது அறிக்கையில் கூறியிருந்தது. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

காவலர் தொப்பியிலுள்ள ஆங்கில எழுத்துக்கள்

* 547 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் துறையினர் தொப்பியில் உள்ள ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில் தமிழ் எழுத்துக்கள் பொருத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில், தமிழ் எழுத்துக்கள் பொருத்த அரசினிடம் தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால், ஆங்கில எழுத்துக்களிலேயே, தமிழ்நாடு என்ற வார்த்தையைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

திரு. ஏ. சுவாமிநாதன்: இந்தக் காவல் துறையினருக்கு இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிற தொப்பி மிகப் பழமை வாய்ந்த ஒரு டிசைனைக் கொண்டது. அதை மாற்ற தற்கால ரீதியில் கொஞ்சம் கவனித்து, வீர உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தொப்பியை மாற்ற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது ஒன்றும் குல்லாய் மாற்றுகின்ற வேலை செய்வதாக இல்லை. (சிரிப்பு)

Supply of motor cycles to Sub-Inspectors

* 548 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to provide motor cycle to Sub-Inspectors and Assistant Sub-Inspectors of Police in Tamil Nadu; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 100 காவல் நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்கு 14-6-1971 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. 95 மோட்டார் சைக்கிள்கள் வாங்கப்பட்டு 95 காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள ஐந்து மோட்டார் சைக்கிள்களும் விரைவில் வழங்கப்படும்.